**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 214/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குழந்தைவேலு | த–பெ /க.பெ. | இராமநாதன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | செக்யூரிட்டி, IOB cest | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026**

---

**26.05.2026**
**குறுக்கு விசாரணை**

**1) எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 25 வருடங்களாக தெரியும். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் மனைவியை தெரியுமா என்றால் எனது மனைவியும், எதிரியின் மனைவியும் நண்பர்கள் ஆவார்கள் அதன் மூலமாக எனக்கு எதிரியை தெரியும். என் மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் திருமயம் ஊரக வளர்ச்சி துறையில் கிளர்க்காக உள்ளார். வழக்கில் எதிரி என்னிடம் ரூ. 6,00,000/– பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எப்போது பணம் கேட்டார் என்றால் 01.4.2025 ல் பணம் கேட்டார். எதற்காக கேட்டார் என்றால் குடும்ப சூழ்நிலைக்காக கேட்டார். 25 வருடம் பழக்கம் இருக்கும்பட்சத்தில் என்ன குடும்ப சூழ்நிலை என்றால் குறிப்பாக கூறவில்லை. கொடுத்தாக கூறப்படும் தொகை எப்போது கொடுத்தேன் என்றால் 30.05.2025 ல் எனது வீட்டிற்கு வந்து மனைவியின் முன்னிலையில் பணம் பெற்றார். எந்த சமயம் என்றால் மாலை 07.00 மணிக்கு பெற்றார்.**

**2) நான் கொடுத்தாக கூறப்படும் தொகைக்கு ஆவணம் எதுவும் பெற்றேனா எனற்ால்**

3 காசோலைகள் கொடுத்தார். வேறு ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்கும் முன்பே எதிரிக்கு தெரியும் என்பதால் காசோலையை கொண்டுவந்தார் என்றால் சரிதான். 3 வழக்கு காசோலைகளில் உள்ள பெயர், தொகை நானை நிரப்பினேன், எதிரி கையொப்பம் செய்தார். வழக்கு காசோலைகளில் உள்ள தேதியை யார் நிரப்பியது என்றால் எதிரியின் முன்னிலையில் நான் நிரப்பினேன். கொடுத்தாக கூறப்படும் ரூ.6,00,000/- ஒரே தவணையில் கொடுத்தேனா என்றால் ஒரே தவணையில் கொடுத்தேன். எதிரியின் வழக்கு காசோலைகளில் தொகைக்கு Limit எதுவும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது எதற்கு ஒரே காசோலையாக எதிரி கொடுக்கவில்லை என்றால் எதிரிதான் ரூ.2 லட்சம் என 3 காசோலைகளை கொடுத்தார். எதற்காக ஒரே காசோலையாக நான் கேட்கவில்லை என்றால் நான் எதுவும் கேட்கவில்லை எதிரியாகவே 3 காசோலைகளை எனக்கு கொடுத்தார்.

3) எதிரி எப்போதும் ரூ.6,00,000/- கடன் பெற்றது இல்லை என்றாலும், அதற்காக வழக்கு காசோலை கொடுத்ததில்லை என்றாலும் சரியல்ல. என் மனைவி ஏலச்சீட்டு பிடிப்பாரா என்றால் இல்லை. என் மனைவியும் புதுக்கோட்டையில் உள்ள நவீன்குமாரும் சேர்ந்து ஏலச்சீட்டு நடத்தினார்கள் என்றால் சரியல்ல. அதில் இருந்து புகார்தாரரின் மனைவி ரூ.3,00,000/-ற்கான சீட்டு எடுத்திருந்தார் என்றாலும் அதற்காகத்தான் 3 காசோலைகள் செக்யூரிட்டிக்கா எனது மனைவியிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல.ரூ.3,00,000/- ஏல சீட்டிற்கான தொகையை எதிரி சரியாக நவீன் குமாரின் G-pay-ற்கு செலுத்திவந்தார் என்றாலும் சரிவர செலுத்தி வந்ததால் மீண்டும் ரூ.3,00,000/-ற்கு ஏலச்சீட்டு எடுத்தார் என்றாலும் சரியல்ல. ஏலச்சீட்டு எதுவும் நடைபெறவில்லை. இரண்டாவது ஏலச்சீட்டிற்கான ரூ.3,00,000/- தொகையை சரியாக செலுத்தாதால் எனக்கும்எ திரிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது என்றாலும், அதை மனதில் வைத்துக்கொண்டு செய்யூரிட்டிக்கா கொடுத்துவைத்திருந்த காசோலையை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு வழக்கு காசோலைகளில் பெயர், தொகை, தேதி நான் நிரப்பவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

**சரியல்ல. பெயர் மட்டும்தான் நான் நிரப்பினேன் என்றாலும், காசோலைகளில் தேதி மற்றும் தொகை வேறு நபர் நிரப்பியுள்ளார் என்றாலும் சரியல்ல, நான்தான் நிரப்பினேன். அதை ஒப்பிடுவதற்கு நிபுனருக்கு அனுப்புவதற்கு ஆட்சேபணை உள்ளதா என்றால்இ இல்லை. வழக்கு காசோலையை கையொப்பம் மட்டும் செய்து செக்யூரிட்டிக்காக கொடுத்திருந்ததை சண்டையினால் காசோலையை நான் தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த ஒரு சண்டையும் இல்லை. நான் நட்பினால் கைமாற்றாக எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் நட்பினால் கொடுத்தேன், கைமாற்றுக்காக கொடுக்கவில்லை. கைமாற்றுக்காக பணம் கொடுத்தது என்று எனது புகாரில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இது தொடர்பாக என் மனைவியை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.**

சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.26 17:49:02 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.